### கள்ளக்குறிச்சி மாவட்டம் – ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி

# இளைஞர் அணி அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் வசந்தம் கார்த்திகேயன் பேச்சு!

திருக்கோவிலூர், மே 3 - கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதி திருக்கோவிலூர் வடக்கு, தெற்கு, மேற்கு, ஒன்றிய கழக இளைஞரணி சார்பாக வாக்குச்சாவடி இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆய்வுக் கூட்டம் சந்தைப் பேட்டை ஆண்டவர் மஹாலில் நடைபெற்றது.

திருக்கோவிலூர் வடக்கு, தெற்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் பா.விஜயராமன், வினோத் ஏகாம்பரம் ஆகியோரின் வரவேற்புரையில், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழக செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் தலைமையில், ரிஷிவந்தியம் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர், கழகக் கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி முன்னிலையில்,



திருக்கோவிலூர் வடக்கு தெற்கு மேற்கு ஒன்றிய கழக செயலாளர்கள் எஸ்.அய்யனார் மொ.இராஜேந்திரன் வ.கிருஷ்ணமூர்த்தி, தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் அ.உதயா ஆகியோர்களின் வாழ்த்துரையில் மிகச் சிறப்பான முறையில் நடைபெற்றது.

இதனை தொடர்ந்து மாவட்டக் கழக செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. பேசுகையில் கழகத்தின் இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வாக்குச்சாவடி முகவர்கள் உள்ளிட்ட அனைவரும் வருகிற 2026 ஆம் ஆண்டு நடைபெற இருக்கின்ற சட்டமன்ற தேர்தலில் உங்களுடைய பணி மிகச் சிறப்பான முறையில் இருக்க வேண்டும்,

ஆகவே இன்று முதல் இருந்தே தேர்தல் பணியை உங்களுடைய பகுதிகளில் ஆரம்பித்து விட வேண்டும், மேலும் நமது திராவிட மாடல் அரசின் சாதனைகளை துண்டு பிரசுர மூலம் பொதுமக்களிடத்தில் வீடு வீடாகச் சென்று திண்ணைப் பிரச்சாரம் மூலம் மேற்கொள்ள வேண்டும், அப்படி நீங்கள் திண்ணை பிரச்சாரத்தின் மூலம் நமது திராவிட மாடல் அரசின் சாதனைகளை பொதுமக்களிடத்தில் கொண்டு போய் சேர்த்தாலே மீண்டும் தொடர்ந்து இரண்டாவது முறையாக கழக ஆட்சி அமையும், நமது முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இரண்டாவது முறையாக தமிழகத்தின் முதல்வராக பொறுப்பேற்றார், மேலும் நமது திராவிட மாடல் அரசின் பல்வேறு முத்தான திட்டங்களால் மக்கள் நமக்கு வாக்களிக்க தயாராக உள்ளனர், ஆகவே கழக நிர்வாகிகள், இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அனைத்து நிலை வாக்குச்சாவடி முகவர்கள் உள்ளிட்ட அனைவரும் தேர்தல் பணிகளை சுறுசுறுப்புடன் செய்திட வேண்டும் என்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்,

இதில் தொகுதி பொறுப்பாளர் ச.அ.பெருநற்கிள்ளி பேசுகையில்

இந்தியாவிலே மிக சிறந்து விளங்கும் மாநிலமாக தமிழ்நாடு உள்ளது, நமது திராவிட மாடல் நாயகர் கழகத் தலைவர் அவர்கள் இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் ஆட்சி புரியும் முதல்வர்களில் நம்பர் ஒன் முதல்வராக திகழ்ந்து வருகிறார், 24 மணி நேரமும் மக்களுக்காகவே தன்னை அர்ப்பணித்து பல்வேறு சிறப்பு வாய்ந்த திட்டங் களை உருவாக்கி வருகிறார், அப்படி இந்தியாவே ஊற்று பார்க்கும் நமது கழகத் தலைவர் அவர்களை இரண்டாவது முறையாக முதல்வராக பொறுப்பேற்க நாம் அனைவரும் ஒன்று கூடி தேர்தல் பணிகளை செவ்வன செய்திட வேண்டும் என்றும், தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் இதுதான் நமது ஒரே இலக்கு என்ற கழகத் தலைவரின் கொள்கைகளை நாம் அனைவரும் பின்பற்று வோம் என்றார்.

இந்தக் கூட்டத்தில் திருக்கோவிலூர் வடக்கு தெற்கு மேற்கு ஒன்றிய கழக துணை அமைப்பாளர்கள் சே.மோகன், மு. ராஜா, அ.ஞானவேல், வே. தயாளன், சு.முருகன், மு.சுமன்ராஜ், ச.பெர்னாட்ஷா, த.ஜெயபிரகாஷ், வெ.வசந்த், கு.ராமராஜ், ப.முருகதாஸ், அ.பாண்டியன் எம்.ஆர்.கே.குமரேசன், ப.சங்கர், சே.சிவராஜ், சு.சுரேஷ், பா.பிரபு, வீ.முத்துக்குமார் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தின் முடிவில் திருக்கோவிலூர் மேற்கு ஒன்றிய கழக இளைஞரணி அமைப்பாளர் க.ஜெயபிரகாஷ் நன்றி கூறினார்.



கத்தார் நாட்டில் பாரம்பரியம் தமிழ் சங்கம் மற்றும் ஆருத்ரா சிலமும் அகாடியும் நடத்திய முதலாவது உலக அளவிலான சிலம்பப் போட்டியில் திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் பொன்னேரி பகுதியை சேர்ந்த 17 மாணவ மாணவிகள் கலந்துகொண்டு உலக அளவில் சாம்பியன் பட்டத்தை வென்றதையொட்டி திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் எம். எஸ்.கே. ரமேஷ் ராஜ் சிலம்ப வீரர்களை நேரில் அழைத்து பாராட்டி வாழ்த்துக்கள் கூறினார் உடன் மாவட்ட அவை தலைவர் மு பகலவன், ந. பரிமளம், நகரச் செயலாளர் ரவிக்குமார், சிலம்பம் பயிற்சியாளர்கள் வா.ஹரிதாஸ் , இரா.சூர்யா, நிர்வாகிகள் மோகன்ராஜ் ,க. சம்பத், பா.து.தமிழரசன், சுமன், உள்பட பலர் உள்ளனர்

### ஒன்றிய அரசுக்குக் கண்டனம்! 3, 5, 8ஆம் வகுப்பு மாணவர்கள் தேர்வில் வெற்றி பெற்றால்தான் மேல்படிப்பு என்பதோடு கட்டாயக் கையெழுத்தும் வாங்குவதா?

# புதிய கல்விக் கொள்கையை உடனே திரும்பப் பெறுக!

## கழக மாணவர் அணிச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி அறிக்கை!

சென்னை, மே 3 - தேசிய கல்விக் கொள்கையின்படி 3, 5 மற்றும் 8ஆம் வகுப்பு மாணவர்கள் தேர்வில் வெற்றி பெற்றால்தான் மேல்படிப்பு செல்ல முடியும் என்பதோடு அதற்காக பெற்றோர்களி டம் கட்டாயக் கையெழுத்தும் வாங்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து கழக மாணவர் அணிச் செய லாளர் இரா. ராஜீவ்காந்தி அறிக்கை வெளியிட்டுள் ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு:-

சாதிய ஒடுக்குமுறைகள் புரையோடிப் போய் கிடக்கிற இந்தியாவில் பிறப்பின் அடிப்படையில்தான் ஒருவருக்கு கல்வி பெறும் உரிமை தீர்மானிக்கப்பட்டது. இந்தச் சூழலை எதிர்த்து தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் போன்ற தலைவர்கள் நடத்திய நூற்றாண்டுகாலப் போராட்டத்துக்குப் பிறகுதான் இந்தியாவில் இருக்கும் ஒவ்வொரு தெருவுக்கும், ஊர் மக்களுக்கும் கல்வி எனும் அடிப்படை உரிமை சாத்தியமாகியிருக்கிறது.

அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத ஒன்றிய பா.ஜ.க அரசு புதிய கல்விக் கொள்கை என்ற பெயரில் 3, 5 மற்றும் 8ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் தேர்வில் வெற்றி பெற்றால்தான் மேல் படிப்புக்குச் செல்ல முடியும் என அறிவித்ததோடு அதற்குச் சம்மதிப்பதாகப் பெற்றோர்களிடம் கட்டாயக் கையெழுத்து வாங்கும் அடாவடியிலும் இறங்கியிருக்கிறது.

3, 5, 8ஆம் வகுப்புகளில் தோல்வியைச் சந்திக்கும் மாணவர்களின் கல்விக் கனவே சிதைந்து, அவர்கள் அப்பா, தாத்தா பார்த்த குலத் தொழில் நோக்கித் தள்ளப்படும் படுபாதகம் இந்த அறிவிப்பின்மூலம் நிச்சயம் அரங்கேறும். அதுதான் ஒன்றிய அரசின் நோக்கமாகவும் இருக்கிறது. இங்கிருக்கும் எளிய மக்களின் குழந்தைகள் கலை, பொறியியல், மருத்துவம் என உயர்கல்வி படிக்க வேண்டுமானால் அதற்கு நுழைவுத் தேர்வைக் கட்டாயமாக்கி, அதிலும் சி.பி.எஸ்.சி பாடத்திட்டத்தை முதன்மையாக்கியதோடு மட்டுமல்லாமல் தற்போது அந்த சி.பி.எஸ்.சி பாடத்தையும் எட்டாக் கனியாக்கும் கயமைத் தனத்தைச் செய்து கொண்டிருக்கிறது மோடி அரசு. தேசிய கல்விக் கொள்கை எனும் பெயரில் ஏழை எளிய மாணவர்களின் கல்விக் கனவைச் சிதைக்கும் அயோக்கியத்தனத்தில்தான் இவர்கள் வந்து நிற்பார்கள் என்பதை முன்கூட்டியே அறிந்திருந்ததால்தான் கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் அதைத் தொடக்கத்திலேயே கிள்ளி எறிய நினைத்து அதற்கு எதிராகச் சட்டப்போராட்டம் நடத்தி, பள்ளிக் குழந்தைகளின் எதிர்காலத்தைக் காக்கும் அரணாக இருக்கிறார்.

கழகத் தலைவர், தாயுமானவரின் குரல் நம் குழந்தைகளுக்கானது மட்டுமல்ல. ஒட்டுமொத்த இந்திய தேசத்துக்குமானது. முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி நம் மாணவர்களின் கல்வி உரிமையைப் பாதுகாக்க பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்களும் ஒன்றிய அரசுக்கு எதிராகப் போராடிக்கொண்டிருக்கிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் வழியில் நம் குழந்தைகளின் கல்வி உரிமையைப் பாதுகாக்க உறுதியேற்போம்.

3, 5, 8ஆம் வகுப்பு மாணவர்களின் உயர்கல்விக் கல்விக் கனவு பொதுத்தேர்வில் வெற்றிபெற்றால்தான் சாத்தியப்படும் எனும் மோடி அரசின் கயமைத்தனத்தை வன்மையாகக் கண்டிப்பதோடு புதிய கல்விக் கொள்கையை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் எனவும் எச்சரிக்கிறோம்.

இவ்வாறு இரா. ராஜீவ்காந்தி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



இராயபுரம் சட்டமன்ற தொகுதியில் சென்னை வடக்கு கேரம் 39வது ஆண்டு கேரம் விளையாட்டை இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினரும் ஐட்ரீம் இரா. மூர்த்தி தொடங்கி வைத்து வீரர்களை வாழ்த்தினார். உடன் ஜி.காட்டன் சதீஷ் குமார், சென்னை மாவட்ட கேரம் சங்கம் உறுப்பினர்களும், கேரம் விளையாட்டு வீரர்கள் மற்றும் கழகத் தோழர்களும் கலந்து கொண்டனர்.


நாள் : 03.05.2025
சனிக்கிழமை
நேரம் : பிற்பகல் 2.00 மணி.
இடம் : வேளச்சேரி
சுடுகாட்டில் நல்லடக்கம்
செய்யப்படும்



கண்ணீர் அஞ்சலி

விழுப்புரம் வடக்கு மாவட்டம் – மரக்காணம் கிழக்கு ஒன்றிய கழக செயலாளரும், மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர்
திரு. இரா.தயாளன் MA., அவர்களின் மாமியாரும்,
மரக்காணம் ஒன்றிய கவுன்சிலர்
திருமதி. பவித்ரா தயாளன் அவர்களின் தாயார்

தெய்வத்திரு. பெருமாள் அவர்கள் மனைவி
பேபி பெருமாள்

என் : 50/1 ஓராண்டியம்மன் கோவில் தெரு, வேளச்சேரி, சென்னை 42
அவர்கள் 2-5-2025 வெள்ளிக்கிழமை
அதிகாலை 4 மணி அளவில் இயற்கை எய்தினார்
உடல் நாளை 3-5-2025 சனிக்கிழமை 2 மணி அளவில்
வேளச்சேரி சுடுகாட்டில் நல்லடக்கம் செய்யப்படும் என்பதை
ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்

பிரிவால் வாடும்
மகன்: திரு. P.கணேசன்
மருமகள்: திருமதி. இந்துஜா
மகள்கள்: திருமதி. மோகனப்பிரியா ஜெயராஜ்
திருமதி. பவித்ரா தயாளன்
பேரன் பேத்திகள் மற்றும் குடும்பத்தினர்கள்